1994 மே 4]

துறைக்காக சுமார் ரூ. 400 கோடிக்கு மேல் எவ்வளவு செலவு செய்ய வேண்டிய நெருக்கடி வரும் என்பதைப் பற்றி எல்லாம் அரசு தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் தாண்டி கிராமப்பகுதியிலே குறிப்பாக பெண்கள் இந்த உணவுப் பொருள்களை வாங்கு வதற்கு வசதியாக ஒரு கிலோ மீட்டருக்குள்ளே என்று நாம் ஒப்புக் கொள்ள முடியாது. அதை நிர்ணயிக்கவும் முடியாது. மிகக் குறைந்த அளவிலே ஒரு 3,4 கிராமங்களுக்குள்ளே மக்கள், குறிப்பாக பெண்கள், சென்று வாங்குகின்ற வசதியை ஏற்படுத்துவதற்காக அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 502, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

502—

சிதம்பரம் தொகுதி தெற்கு விடுதான்களில் கிராம சுகாதார நிலையம் அமைத்தல்.

*17470—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதியில் தெற்கு விடுதான்கள் கிராமத்தில் கிராம சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெற்குவிடுதான்கள் கிராமம் என் பிறந்த ஊராகும். அது பினதங்கிய கிராமம். அத்தகைய பின் தங்கிய கிராமத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் என்னை புவனகிரி தொகுதி மக்களின் நலனுக்காக உழைக்க வாய்ப்பு அளித்த என் அன்பு அன்னை இதய தெய்வம்

புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் அந்தக் கிராமத்திற்கு ஒரு கிராமச் சுகாதார நிலையம் அல்லது மருந்தகமாவது ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலியமலை கிராமத்திலே ஒரு துணை சுகாதார நிலையத்தில் இந்த சின்ன கிராமம் இணைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அந்த துணைச் சுகாதார நிலையத்திற்கு உள்ளடங்கிய மக்கள் தொகை 4,008. எனவே ஒரு துணை சுகாதார நிலையத்திற்கு குறைந்தபட்சம் 5 ஆயிரம் மக்கள் தொகை இருந்தால்தான் புதிதாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க முடியும். எனவே, ஏற்கெனவே இருப்பதேகூட 5 ஆயிரத்திற்கு இல்லாமல் 4 ஆயிரம் மட்டுமே இருக்கிற காரணத்தினால் புதிதாக அமைப்பது என்பது நிதி நிலைமைக்கு இடம் கொடுக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 503, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

503—

பேரணாம்பட்டு தொகுதி, மாதனூரில் சமுதாய நலவாழ்வு மையம் அமைத்தல்.

*19990—டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, மாதனூரில் சமுதாய நலவாழ்வு மையம் (Community Health Centre) தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், துவங்கப்படும் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மாதனூரில் சமூதாய நலவாழ்வு மையம் அமைக்கும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.